RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 39 | பிப்ரவரி.15 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “காங்கிரஸ் ஆட்சியில் வட கிழக்கு மாநிலங்கள் புறக்கணிப்பு, ஆனால்...” : அசாமில் பிரதமர் மோடி பேச்சு

குவஹாத்தி: பிப்.15-

வட கிழக்கு மாநிலங்களை புறக்கணித்து ஆட்சி நடத்தியது கட்சி காங்கிரஸ் என்று குற்றம்சாட்டியுள்ள பிரதமர் மோடி, பாஜக அதனை அஷ்டலட்சுமியாகப் பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அசாமில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு குவஹாத்தியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ‘‘காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது வட கிழக்கு மாநிலங்களை புறக்கணித்தது. ஆனால், எங்கள் அரசு வட கிழக்கு மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

வட கிழக்கு மாநிலங்களை நாங்கள் அஷ்டலட்சுமியாகப் பார்க்கிறோம். அதன் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறோம். வட கிழக்கு மாநிலங்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்க நாங்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

காங்கிரஸ் இந்தியாவை ஒரு தேசமாகக் கூட கருத மறுக்கிறது. இந்திய தாய் மீது சிறிதளவு மரியாதைகூட காட்டாதர்கள் நாட்டின் நலனுக்காக ஒருபோதும் பாடுபட முடியாது. வட கிழக்கு மாநிலங்களில் நிலவிய மிக மோசமான உள்கட்டமைப்பு மக்களின் மனங்களில் இன்னமும் உள்ளது. இன்று வாகனங்கள் ஓடுவது மட்டுமல்ல, விமானங்கள்




கூட தரையிறங்கக்கூடிய வகையில் நெடுஞ்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. இது பெருமைக்குரிய தருணம். அசாமில் உள்கட்டமைப்பை மேம்படுத்த எனது அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அசாம் மக்களின் மனநிலை தற்போது மாறி இருக்கிறது.

பாஜக அடைந்திருக்கும் உயரத்துக்கான முழு பெருமையும் அதன் தொண்டர்களையேச் சாரும். அமைப்பின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதனால்தான் இவ்வளவு எண்ணிக்கையிலான தொண்டர்களை நாங்கள் கொண்டுள்ளோம். நாங்கள் அனைவரும் ஒரு மந்திரத்தால் ஒன்றுபட்டுள்ளோம். பாரத் மாதா கி ஜெய் என்பதே அந்த மந்திரம்.

எனது வாழ்க்கையின் மிகப் பெரிய மரியாதை எதுவென்றால், நான் பாஜக தொண்டராக இருப்பதுதான் என்று பெருமையுடன் கூறுகிறேன். ஒரு பாஜக தொண்டராக, அசாமில் உள்ள நமது தொண்டர்கள் மற்றும் அமைப்பின் வலிமைக்கு நான் தலைவணங்கி மரியாதை செலுத்துகிறேன். ஆதி சக்தி மற்றும் அன்னை காமாக்யா ஆகியோருக்கு எனது வணக்கங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

புல்வாமா தாக்குதல் நிகழ்ந்த தினம் இன்று. இந்த தாக்குதலில் உயிரிழந்த இந்திய தாயின் துணிச்சலான புதல்வர்களுக்கு நான் தலைவணங்குகிறேன். இந்த பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, பயங்கரவாதிகளை இந்தியா தண்டித்த விதத்தை முழு உலகமும் பார்த்தது. சிலர் இன்றும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆபரேஷன் சிந்தூரில் இந்தியாவின் வலிமையை நீங்கள் பார்த்திருப்பீர்கள்’’ என்று பிரதமர் மோடி பேசினார்.



## காளையார்கோவில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உலக வானொலி தினம்

காளையார் கோவில் பிப்.15

சென்னை மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மாநில வள மையம் இணைந்து இணையவழி கூடுகை கலந்துரையாடல் நிகழ்வானது சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கூட்டரங்கில் முதல்வர் முனைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மனோன்மணி முன்னிலை வகித்தார். முதுநிலை விரிவுரையாளர் முனைவர் மெய்யத்தாள் வரவேற்புரையாற்றினார். அதில் உலக வானொலி தினம் குறித்த சிறப்பு செய்திகளை அகில இந்திய வானொலி யின் அதியமான் எடுத்துக் கூறினார். தேசிய பெண்கள் தின நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி 2026 ஆம் ஆண்டு உலக வானொலி தினத்திற்கான கருப்பொருள் வானொலி மற்றும் செயற்கை நுண்ணறிவு. AI என்பது ஒரு கருவி. குரல் அல்ல என்பது ஒளிபரப்பில் செயற்கை நுண்ணறிவின் வளர்ந்து வரும் பயன்பாட்டை மையமாகக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் தலையங்கத் தீர்ப்பு நம்பகத் தன்மை மற்றும் மனித குரல் மையமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஒடிசா மற்றும் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் தொடர்ந்து அகில இந்திய வானொலி வானிலை அறிவிப்புகளை நம்பியுள்ளனர். எஃப் எம் வானொலி சேனல்களை மத்திய அமைச்சரவை அங்கீகரித்து 119 நகரங்களில் 391 தனியார் எஃப் எம் சேனல்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. எனவே இந்தியாவில் சமூக வானொலி நிலையங்கள் மூன்றாம் நிலை ஒளிபரப்பாகும். 528 சமூக வானொலி நிலையங்கள் உள்ளூர் மொழிகள் மற்றும் பேச்சு வழக்குகளில் ஒளிபரப்பப்படுகின்றன. அவை சுகாதாரம் கல்வி விவசாயம் சமூக மேம்பாடு மற்றும் கலாச்சார பாதுகாப்பில் கவனம் செலுத்துகின்றன என்றும் பொதுதகவல் தொடர்பில் வானொலியின் இடத்தை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்றும் எடுத்துக் கூறினார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் நாகலிங்கம் ராகமீனா எஃப் எம் வானொலி குறித்து எடுத்துக் கூறினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் மனோன்மணி அறிவியல் பட்டதாரி ஆசிரியர்கள் ஆரோக்கியசாமி முருகன் தங்களின் இளமைக்கால வானொலி நிகழ்வில் கலந்து கொண்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக முனைவர் சேவற்கொடியோன் முனைவர் ஆரோக்கிய மலர் முனைவர் பரமேஸ்வரன் துணை முதல்வர் கவிக்குயில் சாருமதி அறிவியல் பட்டதாரி ஆசிரியர்கள் பாண்டியன் பாலசுப்பிரமணியன் சரோஜாபாய் முத்துலட்சுமி விஜயலட்சுமி ரூபிணி அருள்ராஜ்குமார் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திக்கணங்கோடு பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

## காளையார்கோவில் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா பதின்ம மேல்நிலைப் பள்ளியின் 11ஆவது ஆண்டு விழா நடைபெற்றது







காளையார் கோவில், பிப்.15

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலிலுள்ள ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா பதின்ம மேல்நிலைப்பள்ளியின் 11 ஆவது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்திய மருத்துவ சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனையின் சேர்மன் மருத்துவர் குமரேசன் காரைக்குடி மகரிஷி கல்வி குழுமத்தின் தாளாளர் கல்விஞானி சேதுராமன் காளையார்கோவில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் சேவற்கொடியோன் கூட்டுத் தலைமை வகித்தனர். பள்ளியின் தாளாளர்கள் சேகர் ஸ்டாலின்ரவீந்திரன் லெனின்ஜீவானந்தம் முன்னிலை வகித்தனர். மாணவிகளின் வரவேற்பு நடனம் அரங்கேற்றத்துடன் பள்ளியின் செயலாளர் மற்றும் முதல்வர் வீரபாண்டி வரவேற்புரை ஆற்றினார். மருத்துவர் குமரேசன் தலைமை உரையாற்றும்போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொள்ளும் வேலையில் அவர்களின் ஒழுக்கமான வாழ்க்கைக்கும் வழி வகுக்க வேண்டும் என்றும் கல்விஞானி சேதுராமன் கூறும்போது தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள ஆசிரியர்களுக்கு தகுந்த சுதந்திரம் அளித்து முன்னேற்றத்திற்கு வழிகாட்ட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். சூசையப்பர்பட்டணம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அமுதா ராமச்சந்திரன் ஆண்டிச்சுரணி பங்குத்தந்தை அருள்தந்தை மரிய லூயிஸ் பத்திரப்பதிவு எழுத்தாளர் பக்கீர் முகைதீன் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பத்மநாபன் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர். பள்ளியின் ஓராண்டு சாதனைகள் செயல் அறிக்கையாக காணொளியில் காட்சிப்படுத்தப்பட்டது. வகுப்பு வாரியாக கல்வியில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கும் 100% வருகை புரிந்த மாணவ மாணவிகளுக்கு சுழற் கேடயம் மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். மாணவர்களின் தனி திறமையை வெளிக்கொணரும் வகையில் வகுப்பு வாரியாக சமூக அக்கறை கொண்ட விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு பாடல்களுக்கு மாணவ மாணவிகள் நடனத்தின் மூலம் தங்கள் திறமைகளை வண்ண வண்ண உடைய அணிந்து வருகை புரிந்து இருந்த பெற்றோர்கள் உறவினர்கள் அனைவரையும் மகிழ்ச்சியின் வெள்ளத்தில் திளைக்க வைத்தனர். மாணவர்களின் விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. பள்ளியின் செயலாளர் தெய்வானைஜீவானந்தம் ஆடிட்டர் கண்ணுச்சாமி வாழ்த்துரை வழங்கினர். 100% தேர்ச்சி பெற செய்த ஆசிரியைகளுக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். கலை நிகழ்ச்சிகளை ஆசிரியப் பெருமக்கள் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர். பள்ளியின் பொருளாளர் முருகேசன் நன்றி கூறினார்.





## இளையான்குடியில் திமுக சார்பில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” நிகழ்ச்சி: 5000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டதை முன்னிட்டு இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்!

இளையான்குடி : பிப்.15-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளையான்குடி ஒன்றிய பேரூர் திமுக சார்பில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" என்ற சிறப்பு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முன்னிலை மற்றும் தலைமை:

இந்த நிகழ்ச்சிக்கு மானாமதுரை தொகுதி பொறுப்பாளரும், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளருமான வளர்மதி தலைமை வகித்தார். இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப. மதியரசன், பேரூராட்சித் தலைவர் மற்றும் செயலாளர் பிஏ. நஜூமுதீன், இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் வே. தமிழ்மாறன், மற்றும் இளையான்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கா. வெங்கட்ராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்புரை:

இந்த நிகழ்வில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிக்குமார் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது திமுக அரசின் சாதனைகள் மற்றும் பெண்களுக்கான நலத்திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இனிப்புகள் வழங்கல்:

முக்கிய நிகழ்வாக, மகளிர் உரிமைத் தொகையாக 5000 ரூபாய் வழங்கப்பட்டதை முன்னிட்டு, பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சி கொண்டாடப்பட்டது.

பங்கேற்ற நிர்வாகிகள்:

இந்நிகழ்வில் இளையான்குடி பேரூராட்சி துணைத்தலைவர் டி கே இப்ராஹிம், மாவட்ட பிரதிநிதி சாருஹாசன், ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன், ராஜேந்திரன், அவைத் தலைவர் மலைமேகு, மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், மகளிர் அணியைச் சேர்ந்த பஞ்சவர்ணம், மகாலட்சுமி, முனீஸ்வரி மற்றும் நிர்வாகிகள் செல்வநாயகம், நீலமேகம், ஜெயினுலாபுதீன், கம்பன், காதர் அப்சல், முருகேசன், மலைச்சாமி, சுந்தரம், சந்தானம் உள்ளிட்ட ஏராளமானோர் திரளாகக் கலந்துகொண்டனர்.




# 100 நாள் வேலை குளறுபடி செய்யும் திமுக அரசை கண்டித்து அதிமுக கூட்டணி கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், பிப்.15-

திருவையாறில் தஞ்சை மேற்கு மாவட்ட அதிமுக ஒன்றிய, நகரம் சார்பில் கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதிதிட்டத்தை சீர்குலைக்க முயலும் திமுக அரசை கண்டித்து

கண்டன ஆர்ப்பாட்டம் தேரடிதிடலில் நடந்தது.

தஞ்சைமேற்கு மாவட்ட செயலாளர் ரெத்தினசாமி தலைமை வகித்தார். இதில் அதிமுக ஒன்றிய செயலாளர்கள் சூரியபிரகாஷ், இளங்கோவன், ராஜா, மாவட்ட துணைச்செயலாளர் பரமசிவம், நகர செயலாளர் செந்தில்மணி, மாவட்ட மாணவரணி செயலாளர் விமல், பாஜக சட்ட சபை தொகுதி இணை அமைப்பாளர் பூண்டி வெங்கடேசன் ,சுற்றுச்சூழல் பிரிவு மாநில செயலாளர்

ஜீவாசிவக்குமார், ஒன்றிய தலைவர் மாலதிகோபி, வீரமணி, மகாலெட்சுமி, பிரியங்கா , பிரசாத், அமமுக அமைப்பு செயலாளர் ஜோதி, ஒன்றய செயலாளர்கள் புனல் செந்தில்குமார், செந்தில்குமார்,

விஜி (எ) அப்பாதுரை, தமிழ் மாநில காங்கிரஸ் சசிகுமார், ரவிக்குமார் ,பாமக வெங்கடேசன், கோபிநாதன் வளரும் தமிழகம் கட்சி சார்பில் தஞ்சை மேற்கு மாவட்ட தலைவர் பிரசாந்த் பாண்டியன் ஒன்றிய செயலாளர் சரவணன் மற்றும் ஸ்ரீதர் மற்றும் கூட்டணி கட்சியின ர் கலந்து கொண்டனர்.




# கல்லூரி மாணவர்களுக்கு விலை இல்லா மடிக்கணினி திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார்

தஞ்சாவூர், பிப்.15-

திருவையாறு அரசர் கல்லூரியில் தமிழக அரசின் “உலகம் உங்கள் கையில்” திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவர்களுக்கு விலை யில்லா மடிக்கணினிகள் வழங்கும் விழா நடந்தது.

உதவி பேராசிரியர் விமலா வரவேற்றார் , கல்லூரி முதல்வர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார் , நகராட்சி துணைத்தலைவர் நாகராஜன் முன்னிலை வகித்தார்.

திருவையாறு எம்எல்ஏ துரை.சந்திரசேகரன் அரசர் கல்லூரி, அரசு ஐடிஐ , அரசு இசைக்கல்லூரி இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவிகள் 333 பேருக்கு மடிக்கணினி வழங்கி பேசினர். இதில்

அரசு தொழிற் கல்லூரி பயிற்சி அலுவலர் மோகன், இசைக் கல்லூரி முதல்வர் கோவிந்தராஜன், தமிழிசை மன்ற பொதுச் செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். விழாவில் அரசு ஐடிஐ மாணவர்கள் 83 பேருக்கும், அரசர் கல்லூரி மாணவர்கள் 194 பேருக்கும், இசைக்கல்லூரி மாணவர்கள் 56 பேருக்கும் மடிகணினி வழங்கப்பட்டது.

உதவி பேராசிரியர் தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.



# ஊத்துக்கோட்டை அருகே மெய்யூரில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில்187 நபருக்கு இலவச வீட்டுமனை பட்டாவழங்கிய வட்டாட்சியருக்கு அப்பகுதிமக்கள் பாராட்டு

திருவள்ளூர், பிப்.15-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டத்திற்கு உட்பட்ட மெய்யூர் கிராமத்தில் மக்கள் நீண்ட காலமாக இலவச வீட்டு மனை பட்ட வேண்டி மனு கொடுக்கப்பட்டு இருந்தது. அதன் அடிப்படையில் வேலகாபுரம் வருவாய் அலுவலர் அவர்களும் கிராம நிர்வாக அலுவலர் அவர்களும் மனு கொடுத்த மக்களின் வீடுகள் தோறும் சென்று ஆய்வு செய்யப்பட்டது.அதன் அடிப்படையில் இரண்டு நாட்களுக்கு முன்பாக உயர்திரு .மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவு பேரில் ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் மற்றும் வருவாய்த்துறை மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் 13.02.2026 அன்று மாலை 4:00 மணியளவில் மெய்யூர் கிராமத்திற்கு நேரில் சென்று 187 நபர்களுக்கு இலவசவீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்கள்

ஊத்துக்கோ.டை வட்டாட்சியர் அவர்களுக்கு மெய்யூர் கிராம பொது மக்கள் சார்பாக ஊத்துக் கோட்டை வழக்கறிஞர்கள் சங்க முன்னால் தலைவர் மூத்தவழக்கறிஞர் மெய்யூர் கி.வேல்முருகன் வழக்கறி ஞர்கள் மதன்குமார், கணபதி, சி.தமிழ்வாணன், மற்றும் அதிமுக கிளை நிர்வாகிகள் சுப்பிரமணி பாலாஜி விஜயகாந்த் மற்றும் புரட்சிபாரதம் கட்சியின் பூண்டி ஒன்றிய செயலாளர் பி.பாரதி தலைமையில் அப்பகுதி மக்கள் வட்டாட்சியர் ராஜேஷ்குமார் அவர்களுக்கு சால்வை அணிவித்து மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தனர் மேலும் பட்டா வழங்கிய இடத்தை உடனடியாக அளவிடு செய்து பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும். என்று வட்டாட்சியர் உறுதி அளித்தது கிராம பொது மக்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது எண்பது குறிப்பிடதக்கது

# முன்கூட்டியே அரசு பணத்தை மகளிர் உரிமை தொகையாக வரவு வைத்ததினால் ஸ்டாலின் ஊழல் செய்துள்ளார், வன்மையாக கண்டிக்கின்றோம் கே.பி.முனுசாமி பேச்சு



கிருஷ்ணகிரி, பிப்15-

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு 125 நாட்களை சீர்குலைக்க முயலும் திமுக அரசு என்கிற தலைப்பில் அதிமுக கூட்டணி கட்சியினர் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது.

அதிமுக துணைப் பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி அவர்கள் பங்கேற்று கண்டன உறையாற்றினார்.

பின்னர் பத்திரிகை யாளர்களுக்கு பேட்டிய ளித்த அவர்:

மகளிர் உரிமைத் தொகையை தடுக்க முயன்றதாலேயே முன்கூட்டியே மகளிர் உரிமைத்தொகை அறி வித்துள்ளதாக ஸ்டாலின் குறித்த கேள்விக்கு:

அவர் தமிழக முதல்வர் ஒரு சட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்த கூடிய இடத்தில் உள்ளவர்.. 2021 தேர்தல் வாக்குறுதியாக அளித்து 3 ஆண்டுகள் வழங்காமல் பின்னர் திட்டத்தை கொண்டுவந்தார்.. அந்த திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டால் எப்படி தடுக்க முடியும்

உதாரணமாக சத்துணவு திட்டம் அறிவித்து தேர்தல் வந்தால் நிறுத்தி விடுவார்களா.. இதனை அவர் மக்களுக்கு தவறான முறையில் தெரிவிக்கிறார்

5000 ரூபாய் என்பது தன்னை காப்பாறவும், விமர்சனங்களில் பாதுகாத்துக்கொள்ள வரைவு வைத்துள்ளார்.

தேர்தல் முன்பாக அட்வான்சாக ஏன் பணம் கொடுக்கிறார்.. மாதந்தோறும் வழங்க வேண்டிய பணத்தை அரசு பணத்தை எடுத்து ஸ்டாலின் ஊழல் செய்துள்ளார்..அடுத்த தேர்தலை குறிவைத்து அறிவித்துள்ளதால் இதனை வண்மையாக கண்டிக்கிறோம் என பேசினார்.

மகளிர் உரிமைத் தொகை 2000 ரூபாயாக உயர்த்தப்படும் என ஸ்டாலின் அறிவித்த கேள்விக்கு:

நாங்கள் முதலாவதாக 2000 ரூபாய் வழங்குவோம் என சொன்ன வாக்குறுதி மக்களை சென்றடைந்தது என்பதால், அவருக்கு பயம் வந்துவிட்டது.. அதிமுக தேர்தல் வாக்குறுதியால் நமக்கு பாதகம் ஏற்ப்படும் என எண்ணி, தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்காமல் தற்போது அறிவித்துள்ளார்.

விஜய் அரசியல் வருகைக்கு பிறகு ஸ்டாலின் பயந்து தான் 5000 ரூபாய் வரைவு வைத்ததாக விஜய் கருத்திற்கு:

விஜய் தன்னைதானே புழகந்து கொள்கிறார்.. அவருக்கு எவ்வளவு உயரம் உள்ளது, மக்கள் செல் வாக்கு எவ்வளவு உள்ளது தெரியாமல், நான்கு சுவற்றுக்குள் உக்கார்ந்து சில அறிவு ஜீவீகளை வைத்துக்கொண்டு, பணத்தை வைத்துக் கொண்டு வாய்ப்பு கிடைக் காத என அலைபவர்களை வைத்துக்கொண்டு பிதற்றிக்கொண்டிருக்கிறார்.

கோடைக்கால நிதி குறித்த கேள்விக்கு:

மக்கள் அறிவாளிகள் மக்களிடம் உண்மையை பேச வேண்டும், இரண்டு மாதத்திற்கு முன்பே ஏன் கொடுக்க வேண்டும், கொடுக்க என்ன உரிமை உள்ளது.. வாக்கு வங்கிக்காக அரசு கஜானாவில் உள்ள பணத்தை தன்னுடைய தேவைக்காக கொடுப்பதை ஏற்க முடியாது

இந்த ஆண்டு தான் கோடை வந்ததா? கடந்த ஆண்டுகளில் கோடை வரவில்லையா? கடந்தாண்டு கொடுத்திருந்தால் கேட்டுருக்க மாட்டோம், கடந்தாண்டு பொங்கல் நிதி கொடுத்திருந்தால் கேட்டிருக்க மாட்டோம்.

தேர்தலை முன்வைத்து ஸ்டாலின் ஆடுகிற நாடகம் இது, மக்கள் ஏமாற மாட்டார்கள் என பேசினார்



■ ராமநாதபுரம் மாவட்டம் போகலூர் சாலை விபத்தில் மரணமடைந்த மேற்கு ஒன்றிய தொட்டிதட்டி கிளை கழக உறுப்பினர் மாரிமுத்துவின் இழப்பிற்காக அவரது மனைவி ருக்குமணி மற்றும் குழந்தைகளிடம் ரூபாய் 10 லட்சத்திற்கான காசோலையை திமுக தலைவர் தமிழக முதல்வர் மு. க .ஸ்டாலின் வழங்கினார் இதற்கு பரிந்துரை செய்த மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கத்திற்கு குடும்பத்தினர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர் உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் சே. முருகேசன் போகலூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் R.குணசேகரன் கிளை கழக அவை தலைவர் சேது பாண்டி ஆகியோர் உடன் இருந்தனர்




# திருநீர்மலை அருகே மஸ்ஜிதுல் மஜீத் ஜூம் ஆ பள்ளிவாசல் என ஏழு பள்ளி வாசலுக்கு அனைத்து இஸ்லாமிய மக்கள் சார்பில் அடக்கஸ்தலம் வேண்டும்

## தமிழக அரசுக்கு கோரிக்கை வலியுறுத்தி பள்ளி வாசல் செயலாளர் முகமது முத்தலிபு செய்தியாளர்களிடம் பேட்டி

செங்கல்பட்டு, பிப்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த திருநீர்மலை அருகே மஸ்ஜிதுல் மஜீத் ஜூம் ஆ மசூதி கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது இந்த மசூதியில் வெளிமாநிலங்களில் இருந்து 1000 த்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் திருமுடிவாக்கம், மேத்தா நகர், மணிகண்டன் நகர், சீட்கோ உள்ளிட்ட பகுதியில் 1500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன இந்த நிலையில் தற்போது உள்ள இஸ்லாமியர்களுக்குக்கான அடக்கஸ்தலம் இடவசதி இல்லாத காரணத்தால் 7 மசூதிக்கும் சேர்ந்தவாறு அடக்கஸ்தலம் வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கையை முன் வைத்தார் மஸ்ஜிதுல் மஜீத் ஜூமா பள்ளிவாசல் செயலாளர் முகமது முத்தலிபு பின்னர் செய்தி யாளர்களிடம் பள்ளி வாசல் செயலாளர் முகமது முத்தலிபு பேசுகையில் இந்த பகுதியில் அடக்கஸ் தலம் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறோம் எனவும் இங்கு உள்ள சர்வே எண் 306ல் 160 செண்ட் இடத்தில் 60 செண்ட் இடம் வழங்க வேண்டும் எனவும் இது குறித்து முதலமைச்சர் தனி பிரிவுக்கு மனு அளித்துளத்தாகவும், திமுக கூட்டணியில் உள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பேசினார்.




# கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு

தஞ்சாவூர், பிப்.15-

திருவையாறு அருகே திருப்பழனம் ஊராட்சியில் கல்லூரி முதல்வர் ரவிச்சந்திரன் வழிகாட்டுதலின்படி அரசர் கல்லூரி சமூக பணித்துறை 2 ம் ஆண்டு மாணவர்கள் சார்பில் தமிழக பண்பாடும் இன்றைய சமுதாயம் குறித்து பொதுமக்களுக்கான விழிப்புணர்வு முகாம் சமுதாய கூட வளாகத்தில் நடந்தது.

2 ம் ஆண்டு சமூகப் பணித்துறை மாணவர் பால்ராஜ் வரவேற்றார், திருப்பழனம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆசிரியை உதயா தலைமை வகித்தார். கிராம உதவியாளர் சிவகுமார், கணினி அலுவலர் பிரேமாவதி முன்னிலை வகித்தனர். அரசர்கல்லூரி உதவி பேராசிரியர் முத்துக்குமார் தமிழக பண்பாடு இன்றைய சமுதாயம் எதை நோக்கி செல்கிறது சமுதாயத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும் தமிழக பண்பாட்டை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார். உதவி பேராசிரியர் விமலா , வழிகாட்டுநர் உதவி பேராசிரியர் அன்பரசி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் கல்லூரி மாணவ, மாணவிகள், ஊர் பொதுமக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை மாணவர்கள் அர்ஜுன் ,சந்தோஷ் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். மாணவர் ரோகித்சின்னராஜா நன்றி கூறினார்.



# நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை அதிமுகவினர் முற்றுகையிட்டு 100 நாள் வேலையில் முறைகேடு முறைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள கோரி ஆர்ப்பாட்டம்

நிலக்கோட்டை, பிப்.15-

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு அ.தி.மு.க கிழக்கு ஒன்றிய செயலாளர் யாகப்பன் தலைமையில் சுமார் 500க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. மற்றும் பாரதிய ஜனதா கட்சி யினர், பாட்டாளி மக்கள் கட்சியினர், ஐ ஜே கே கட்சியினர், தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் ஜான் பாண்டியன் மற்றும் என்.டி.ஏ. கூட்டணியினர் திரண்டு நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டு தமிழகத்தில் இந்திய பாரத பிரதமர் 125 ஆவது தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை சீர்குலைக்கும் தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம். இந்த ஆர்ப்பாட்டத்தில் நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தேன்மொழி சேகர்,நிலக்கோட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் நல்லதம்பி, திண்டுக்கல் முன்னாள் எம்பி உதயகுமார், நகரச் செயலாளர்கள் தண்டபாணி, சேகர், மாநில பொதுக்குழு உறுப்பினர் ரேவதி தங்கபாண்டியன், பாமக மாவட்ட செயலாளர் மணி, பாரதிய ஜனதா கட்சியின் ஒன்றிய பொறுப்பாளர் முன்னாள் எம்எல்ஏ அன்பழகன், ஒன்றிய துணைச் செயலாளர்கள், ஒன்றிய அவைத் தலைவர்கள், ஒன்றிய நகர கிளைக் கழக பொறுப்பாளர்கள் பட பலர் கலந்து கொண்டனர்.




## திமுக அரசை கண்டித்து மானாமதுரையில் அதிமுக மற்றும் கூட்டணி கட்சியினர் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம்!

மானாமதுரை. பிப்.15

மத்திய அரசின் அறிவிப்புகளைச் செயல்படுத்தத் தவறிய திமுக அரசைக் கண்டித்து, சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

முக்கிய கோரிக்கை:

மத்திய அரசு அறிவித்து 125 நாட்களாகியும், அந்தத் திட்டங்களைத் தமிழகத்தில் உள்ள திமுக அரசு இன்னும் செயல்படுத்தாமல் நிலுவையில் வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்ட விவரம்:

மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். குணசேகரன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தின் போது திமுக அரசுக்கு எதிராகக் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்:

இந்த நிகழ்வில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் அதிமுகவின் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்:

* ஜெயபிரகாஷ் (ஒன்றிய செயலாளர்)
* விஜி போஸ் (நகர செயலாளர்)
* சி. மாரிமுத்து (முன்னாள் சேர்மன்)

மேலும், இந்த ஆர்ப்பாட்டத்தில் பாஜக, அமமுக, தமமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் மற்றும் தொண்டர்கள் என ஏராளமானோர் திரளாகப் பங்கேற்றுத் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## குன்னூர் ஜான்சர்ச் மண்டபத்தில் விலையில்லா இணைய.பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் 440 பயனாளிகளுக்கு நீலகிரி நாடளுமன்ற உறுப்பினர் அரசு தலைமை கொறடா ஆகியோர் வழங்கினர்

நீலகிரி, பிப்.15-

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒய்எம்சிஏ புனித ஜான்சர்ச் கல்யாண மண்டபத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற விலையில்லா இணைய பட்டா வழங்கும் நிகழ்ச்சியில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா , அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில், 440 பயனாளிகளுக்கு நத்தம் இணையவழி பட்டாக்களை வழங்கினார்.



பின்னர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:

இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ள முதலமைச்சர் என்ற பெயரெடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றப்பின் ஏழை, எளிய மக்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்கள் வாழ்வாதாரம் முன்னேற வேண்டும் என்ற நோக்கில், புதிய தொழிற்சாலைகள், புதிய முதலீடுகள் மற்றும் அனைத்துத்துறை சார்பில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், நத்தம் நிலவரித்திட்ட வருவாய் பின் தொடர் பணிகள் இணைய தளத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படாமல் விடுபட்டு போன பட்டாதாரர்கள் அரசின் நலத்திட்ட பலன்களை பெறும் வகையில், விடுபட்ட பட்டாதாரர்களை கண்டறிந்து இணையவழி பட்டா வழங்கிட மாவட்ட நிர்வாகம் சார்பில் குழு அமைக்கப்பட்டு இக்குழுவின் மூலம் கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டத்தில் 73 பயனாளிகள் கண்டறியப்பட்டு, 2025 ஆகஸ்ட் மாதம் முதற்கட்டமாக 73 பட்டாக்களும், உதகை மற்றும் குந்தா வட்டத்தில் 773 பயனாளிகள் கண்டறியப்பட்டு 12.01.2026 அன்று 773 பட்டாக்களும் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் குன்னூர் வட்டத்தில் 157 பயனாளிகளும், கோத்தகிரி வட்டத்தில் 283 பயனாளிகளும் கண்டறிய ப்பட்டு 440 பயனாளிகளுக்கு இணைய வழி பட்டா வழங்கப் பட்டுள்ளது.

மேலும், பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு மட்டும் வழங்காமல் பிற்படுத்தப்பட்டோருக்கும் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு கூட்டம் நடத்தி அவர்களையும் கண்டறிந்து அவர்களுக்கும் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா நகர்மன்ற தலைவர்கள் சுசீலா (குன்னூர்), ஜெயக்குமாரி (கோத்தகிரி), மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) பழனிசாமி, துணைத்தலைவர் வாசிம்ராஜா, உதகை நகர்மன்ற துணை தலைவர் ரவிக்குமார், வட்டாட்சியர்கள் சதீஷ்வர நாயக் (குன்னூர்), ராஜலட்சுமி (கோத்தகிரி), உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## வேலம்பட்டி, நாகரசம்பட்டியில் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா சைக்கிள், மதியழகன் எம் எல் ஏ வழங்கினார்

கிருஷ்ணகிரி, பிப்.15-

காவேரிப்பட்டணம் ஒன்றியம், வேலம்பட்டி மற்றும் நாகரசம்பட்டி அரசு பள்ளிகளில், தமிழக அரசின் விலையில்லா சைக்கிள் வழங்கும் விழா நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் தம்பிதுரை தலைமை தாங்கினார்.சாந்தமூர்த்தி, பேரூராட்சி துணை தலைவர் குமார், முன்னாள் தலைவர் தங்க ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஆறுமுகம் வரவேற்று பேசி னார். மாவட்ட செயலா ளர் மதியழகன் எம்எல்ஏ கலந்து கொண்டு, விலை யில்லா சைக்கிள்களைவழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய பொறுப்பாளர் இளையராஜா, குப்புசாமி, பாபு, சின்னசாமி, சங்கர், சதாசிவம், உதயகுமார், ரவி, சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டிய சத்து ணவு கூடத்தை மதியழகன் எம்எல்ஏ திறந்து வைத்தார்.



■ நீலகிரி மாவட்டம், குன்னூர் டேன்டீ தலைமை அலுவலகத்தில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் நடைபெற்ற ஓய்வு பெற்ற டான்டீ தோட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் விடுப்புடன் கூடிய ஊதியம் வழங்கும் விழாவில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் ரூ.35.42 கோடி மதிப்பில் பணிக்கொடை மற்றும் விடுப்பு ஊதிய தொகையினை வழங்கினார்.




## திருப்பத்தூர் கிரீன் பார்க் பள்ளியில் ரோபோட்டிக் பயிற்சி முகாம்

சிவகங்கை பிப்.15

திருப்பத்தூர் சிவகங்கை ரோட்டில் அமைந்துள்ள பி.எஸ்.ஆர் கிரீன் பார்க் இன்டர்நேஷனல் பள்ளியில் ஒரு நாள் ரோபோடிக் பயிற்சி முகாம் நடந்தது. இம்முகாமில் சுற்றுவட்டார உள்ள பள்ளிகளில் இருந்து சுமார் 100 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பி.எஸ்.ஆர் கல்விக் குழும சேர்மன் மற்றும் செயலாளர் சுலைமான் பாதுஷா இந்நிகழ்விற்கு தலைமை தாங்கினார் . சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயலாளர் பிரபு கலந்து கொண்டு மாணவர்களுக்கு இன்றைய வாழ்க்கையில் அறிவியலின் பங்கு மற்றும் இந்த உலகத்தை அறிவியல் எவ்வாறு இயக்குகிறது என்று எடுத்துரைத்தார். திருப்பத்தூர் சிவில் இன்ஜினியர் அசோசியேசன் சார்பாக அதன் தலைவர், இன்ஜினியர் ஜாஃபர் மற்றும் பொருளாளர் அஹமது அலி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். விஞ்ஞான தொழில்நுட்ப விரிவுரையாளர்கள் முகமது தாஜுதீன் மற்றும் ராகுல் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை பயிற்சி அளித்தனர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைக் கண்டு வியந்தனர். இளம் மாணவர்களுக்கு இத்தகைய முன்னெடுப்பை ஏற்படுத்திக் கொடுத்த பள்ளி நிர்வாகத்தை அனைவரும் பாராட்டினர்.

கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது..

## பெரியபாளையத்தில் மத்தியஅரசின் 125 நாள் கிராமபுர ஊரக திட்டத்தை சிதைத்த திமுகாவை கண்டித்து ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகள் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்

திருவள்ளூர், பிப்.15-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் கிழக்கு மேற்கு தொற்கு ஒன்றிய upஅதிமுக சார்பில் பெரியபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரே மத்திய அரசின் 125 நாள் கிராமபுர ஊரக வேலை திட்டத்தை சிதைக்கும் திமுக அரசை கண்டித்து ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகள் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் 12.02.2026 அன்று காலை 11:00 மணியளவில் நடைபெற்றது





இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக முன்னால் சட்டமன்ற உறுப்பினரும் அம்மா பேரவை மாவட்ட செயலாளருமான K.S.விஜயகுமார் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் கோதண்டன், வேதகிரி, மகேந்திரன், மற்றும் பாஜக மாநில பொறுப்பாளர் பாஸ்கர் மாவட்ட தலைவர் சுந்திரம் பாமக மாவட்ட செயலளர் பிரகாஷ் புரட்சிபாரதம் கட்சியின் மாவட்ட செயலாளர் கராத்தே ப.வில்சன் கலந்துகொண்டு திமுக அரசுக்கு எதிராக கண்டனா கோஷாங்களை எழுப்பி ஆற்பாட்டத்தில் ஈடுபட்டனர் மேலும் இந்த ஆற்பாட்டத்தில்அதிமுக சார்பில் ரத்தினம் அமமுக மேற்கு ஒன்றிய செயலாளர் தாராட்சி T.N.பழனி அதிமுக ஊத்துக்கோட்டை பேரூர்செயலாளர் ஷேக்தாவுத் மற்றும் சித்திக் கலைச்செல்வன் நவீன் விமல் கோதண்டன் மோகன்பாபு

புரட்சி பாரதம் சார்பில் மாவட்ட பொறுப்பாளர்கள் எல் கே மாரிமுத்து வெங்கல் பிரம்மா ராமலிங்கம் மேஷாக் பிடிசி.முணிவேல் மற்றும் பிஜேபி சார்பில் மண்டலதலைவர் அரவிந்த் நாகராஜ் பாமக சார்பில் செல்வராஜ் முருகன் மற்றும் ஒன்றிய மாவட்ட ஒன்றிய கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## கடையநல்லூரில் ஒன்றிய அரசை கண்டித்து திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம்

தென்காசி, பிப்.15-

ஒன்றிய பாஜக அரசின் பட்ஜெட்டை கண்டித்து தமிழக முழுவதும் திமுக கூட்டணி கட்சிகளின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என கழக தலைமை அறிவித்ததை தொடர்ந்து தென்காசி மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லத்துரை ஆகியோர் ஆலோசனையின் பேரில் கடையநல்லூர் நகரம் சார்பில் வடக்கு பகுதியில் பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே நகர கழக செயலாளர் அப்பாஸ் தலைமையிலும் தெற்கு நகர கழகம் சார்பில் மணிக் கூண்டு அருகே பொறுப்பாளர் இத்தாலியன் பீரப்பா தலைமையிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் திமுக கூட்டணி கட்சிகள் நகரம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் உறுப்பினர்கள் சிட்டி திவான் மைதீன் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்




முருகன் மாலதி தனலட்சுமி இலக்கியப் பேரவை யாத்திரா பழனி முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் தங்கராஜ் பாண்டியன் பிச்சுமணி வார்டு கழகச் செயலாளர்கள் பிரதிநிதிகள் சார்பு அணி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் ஆர்ப்பாட்டம் குறித்து நகர தெற்கு பொறுப்பாளர் இத்தாலியன் பீரப்பா கூறியதாவது மத்தியில் ஆளும் பாஜக அரசின் நிதிநிலை அறிக்கையில் பிரதமர் மோடி நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் தமிழகத்திற்கு பெரும் தீங்கு அழைத்து வருகின்றனர் தமிழகத்திற்கான கல்வி நிதி 3458 கோடி நூறு நாள் வேலைத்திட்ட நிதி 2000 கோடி எல்ஜி ஜீவன் குடிநீர் இணைப்பு திட்ட நிதி 3,112 கோடி உட்பட எந்த நிதியும் வழங்கப்படவில்லை வளர்ச்சித் திட்டங்களுக்கு இரண்டு பைசா கூட ஒதுக்காமல் தமிழக மக்களை ஒன்றிய அரசு புறக்கணித்துள்ளது தமிழகத்திற்கான நிதியும் இல்லை இந்த வித வளர்ச்சி திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை என்ற ஒன்றிய அரசு கைப்பிடித்த போதிலும் அவர்கள் காலில் விழுந்து அடிமை அதிமுக அவர்களை ஆதரித்து வருகிறது தமிழகத்திற்கு வரவேண்டிய நிதியை தர மறுத்த போதும் 100 நாள் வேலையை நீ இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சட்டத்தை திரும்பப் பெறவே அதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க செய்யாமல் மோடி தலைமையிலான பாஜக அரசு ஏழை எளிய மக்களின் வாயிலும் வயிற்றிலும் அடித்துள்ளது அமெரிக்காவின் விவசாயம் சார்ந்த பொருட்களை இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டு இந்திய விவசாயிகளின் வாழ்வையே பாஜக அரசு கேள்விக்குறியாகி உள்ளது ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம் விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என கிராமப்புற மக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதலை ஒன்றிய அரசு தமிழக மக்கள் மீது நிகழ்த்தியுள்ளது அதற்கு உறுதுணையாக அடிமை பாதம் தாங்கிய பழனிச்சாமி தமிழக மக்களுக்கு துரோகம் செய்து வருகிறார் ஒன்றிய பட்ஜெட்டை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு மிக்க நன்றி என தெரிவித்தார்.



## தாம்பரம் சண்முகம் சாலையில் திமுக மகளிர் அணி சார்பில் இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்

தாம்பரம் பிப்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாட்டில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் 1.31 கோடி பெண்களின் வங்கிக் கணக்குகளில் திமுக அரசு திடீரென ரூ.5 ஆயிரத்தை வரவு வைத்திருக்கிறது.இதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தாம்பரம் மாநகர செயலாளரும், தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினருமான எஸ்.ஆர்.ராஜா அவர்களின் அறிவுருத்தலின் படி,பொருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல தலைவருமான டி.காமராஜ் அவர்களின் வழிகாட்டுதலின்படி தாம்பரம் மாநகர 49 வார்டு வட்ட துணை செயலாளர் லட்சுமி மோகன் ஏற்பாடில் தாம்பரம் சண்முகம் சாலையில் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர மகளீர் அணி அமைப்பாளரும் மாமன்ற உறுப்பினருமான ரமனி ஆதிமுலம் கலந்து கொண்டு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.இதில் பகுதி துணை செயலாளர் செல்வகுமார்,மகளீர் அணி தனலட்சுமி, செல்வி, வனஜா, சரஸ்வதி, மாலதி, சரண்யா, சசிகலா, பரமேஸ்வரி, சசிகலா, லஷ்மி, சசிகலா, குமார், அன்பு, ரமேஷ், எம்.ரமேஷ், குருமணி, விஜய், தமிழ், அருள்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்




# மகளிர் உரிமைத் தொகை ரூ.5000 வரவு - காவேரிப்பட்டினத்தில் பெண்கள் பட்டாசு வெடித்து நன்றி தெரிவிப்பு

கிருஷ்ணகிரி, பிப்.15-

மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, மகளிர் உரிமைத் தொகை பெறும் பயனாளி களுக்கு இன்று காலையே ரூ.5000 வரவு வைக்கப்பட்டது. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3000 மற்றும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2000 வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து காவேரிப்பட்டினம் நகர, ஒன்றிய கழகம் சார்பில் நகர செயலாளர் ஜே.கே. எஸ். பாபு, ஒன்றிய செயலா ளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன் ஆகியோர் தலைமையில் 50க்கும் மேற்பட்ட பெண்கள் பட்டாசு வெடித்து நன்றி தெரிவித்தனர்.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன், முன்னாள் நகர செயலாளர் ஜேகேஎஸ் சாஜித், மாநில நிர்வாகி சங்கர் தர்மன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப் பாளர் பாரி, பேரூராட்சி துணைத் தலைவர் மாலினி மாதையன், நகர துணை செயலாளர் விஜயகுமார், கவுன்சிலர்கள் சக்தி, கோகுல், அமுதா மீனாட்சி, மாவட்ட பிரதிநிதி பசுபதி, ஒன்றிய பிரதிநிதிகள் பாஸ்கர், அலாவுதீன், கணேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டணம் பன்னீர்செல்வம் தெரு, தாம்சன்பேட்டை பூங்காவனத்தம்மன் அங்காளம்மன் கோவில் மஹா சிவன் ராத்திரி விழா

கிருஷ்ணகிரி, பிப்.15-

காவேரிப்பட்டணத்தில் பன்னீர்செல்வம் தெருவில் அமைந்துள்ள அங்காளம்மன் கோவில் மற்றும் தாம்சன் பேட்டையில் அமைந்துள்ள பூங்காவனத்தம்மன் கோயில்களில் மயான சூறை விழா வரும் திங்கள் 16. 2 .2026 அன்று நடைபெற உள்ளது.

முன்னதாக இன்று அம்மனுக்கு கணபதி ஹோமம், பொங்கல் வைத்தல், அபிஷேக ஆராதனையும் நந்தி வாகன உற்சவம் மற்றும் கொடியேற்றத்துடன் துவங்கியது.

15.2.26 அன்று மகா சிவராத்திரி முன்னிட்டு பெண் பூத வாகன உற்சவம் மற்றும் தூர்வாசகர்வ பங்க நாடகம் நடைபெறும்,

16.2.26 அன்று காலை 3 மணி முதல் முகவெட்டு மற்றும் 108 தீர்த்த பால்குடம் அபிஷேகம், மயான சூறை மூலவர் அலங்காரம்,காலை 6:00 மணி முதல் அலகு போட ஆரம்பித்தல் ஆண் பூத வாகனத்தில் மதியம் மூன்று மணி அளவில் அம்மன் மயான சூறை ரதத்தை கழக துணை பொதுச்செயலாளர் கே பி முனுசாமி அவர்கள்துவக்கி வைத்தல்,இரவு 7 மணிக்கு வான வேடிக்கை மற்றும் இரவு 12 மணிக்கு அம்மனுக்கு தாலாட்டு, 17.2.26 அன்று விடா கஞ்சி, அன்னதானம் வழங்கப்படும், 18.2.26 அன்றுஅக்னிகுண்டம் பூ மிதி அம்மன் சிம்ம வாகனத்தில் வீதி உலா மற்றும் அன்னதானம், 20.2.26 அன்று அம்மையப்பன் திருக்கல்யாணம் திருமண விருந்து நடைபெறும், 21.2.26அன்று மஞ்சள் நீராட்டு நையாண்டி மேளம் தொடர் புஷ்ப பல்லக்கில் சிம்ம வாகனத்தில் அம்மன் வீதி உலா, 22.2.26அன்று அம்மனுக்கு கும்ப பூஜை,இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் பருவத ராஜ குலத்தினர் மற்றும் பூங்காவனத்தம்மன் ஆலய இளைஞர்கள் குழு மற்றும் ஊர் பொதுமக்கள், மற்றும் , அங்காளம்மன் கோவில் தர்மகர்த்தாக்கள் ஆகியோர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்..



■ கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு ரூ.5,000 வரவு வைத்ததற்கு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கொண்டாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் மற்றும் எம்.எல்.ஏ மதியழகன் தலைமையில் திமுக அலுவலகம் அருகே பட்டாசு வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். நிகழ்ச்சியில் மாநில நிர்வாகி சங்கர் தர்மன், ஒன்றிய செயலாளர்கள் சரவணன், நாராயணன், நகர செயலாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பாரி, லயோலா ராஜசேகர் உள்ளிட்ட திமுகவினர் பலர் உடன் இருந்தனர்..



■ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்கழகப் பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தமிழர் எடப்பாடி ஆணைக்கிணங்க கழக அமைப்புச் செயலாளர் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் டாக்டர் சி விஜயபாஸ்கர் எம்பிபிஎஸ் எம் எல் ஏ அவர்கள் புதுக்கோட்டைமாவட்ட கழகச் செயலாளர் வடக்கு கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கிராம மக்களின் 125 நாள் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை சீர்குலைக்கும் முயலும் முடியாது திமுக அரசை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் இதில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட எம் ஜி ஆர் இளைஞர் அணி செயலாளர் டாக்டர் ஆர் வி பழனிவேல் புதுக்கோட்டை மாவட்ட இளம் பாசறை கருப்பையா ஒன்றிய நிர்வாகிகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்

# காவேரிப் பட்டணத்தில் அதிமுக சார்பில் திமுக அரசை கண்டித்து ஆர்பாட்டம்



கிருஷ்ணகிரி, பிப்.15-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பட்டணத்தில் அதிமுக சார்பில் திமுக அரசை கண்டித்து மாபெரும் கண்டண ஆர்பாட்டம் ஒன்றிய செயலாளர்கள் பையூர் பெ.ரவி, கிருஷ்ணன், ரவிசந்திரன் தலைமை தாங்கினர்.

நகர செயலாளர்கள் விமல், அண்ணாதுரை,அவைத் தலைவர்கள் சுந்தர்,வேலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் அதிமுக இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம் சதீஷ்குமார் கலந்து கொண்டு கண்டன பேருரை ஆற்றினார். அப்போது அவர் பேசும்போது தமிழகத்தில் விடியா திமுக அரசு பொய்யான வாக்குறுதிகளை சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறது,இதற்கெல்லாம் மக்கள் மயங்கமாட்டார்கள் எங்கள் பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்கள் அறிவித்த தேர்தல் வாக்குறுதியை பார்த்து மிரண்டு போய் உள்ளார் ஸ்டாலின் அதன் காரணமாகவே அவர் பல்வேறு பொதுக்கூட்டங்களில் தாறுமாறாக பேசி வருகிறார், இவருக்கு இது இறுதி தேர்தல் ஆகும்

மேலும் 2026 தேர்தலுக்கு மக்கள் தயாராகி விட்டார்கள்,எனவே 2026 இல் மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வரும் எங்கள் கழக பொது செயலாளர் எடப்பாடியார் மீண்டும் தமிழகத்தில் முதலமைச்சர் ஆகுவார் இது உறுதி என பேசினார்.நிகழ்ச்சியில் எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணைச் செயலாளர் கோ.ரவிச்சந்திரன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ஜமுனா கிருஷ்ணன்,முன்னாள் ஒன்றிய செயலாளர் பிரபாகரன்,முன்னாள் மாவட்ட பால் வள தலைவர் குப்புசாமி, மாவட்ட விவசாயி அணி செயலாளர் மோகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயக்குமார்,முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சங்கீதா கேசவன்,மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைத் தலைவர் ஆறுமுகம்,பாட்டாளி மக்கள் கட்சி மாநில துணைத் தலைவர் மாதேஷ், ஒன்றிய செயலாளர் மாது, செவத்தான்,அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஒன்றிய செயலாளர் முனியப்பன் பாரதி ஜனதா கட்சி முன்னாள் ராணுவ வீரர் பிரிவு மாநில செயலாளர் கோவிந்தராஜ் ,மாவட்ட செயலாளர் சரண்யா, ஒன்றிய தலைவர்கள் சக்திவேல், குமார் மற்றும் அதிமுக ஒன்றிய பாசறை செயலாளர் பெரியசாமி, சண்முகம் சின்னதுரை, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தின் போது திமுகவுக்கு எதிராக பல்வேறு கண்டன கோசங்கள் எழுப்பப்பட்டது. இதில் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலை செய்யும் பெண்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






# விழுப்புரம் மாவட்டத்தில் பாரத் பெட்ரோலியம் சார்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது

விழுப்புரம், பிப்.15-

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், மற்றும் என் ஜி ஓ இணைந்து நடத்தும் , புதைபடிவ எரிபொருட்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை ஊக்குவிப்பது குறித்து பாதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, “எண்ணெய் மற்றும் எரிவாயுவைப் பாதுகாப்போம், பசுமைக்கு மாறுவோம்“ என்ற கருப்பொருளில்

விழுப்புரம் சிக்னலில் இருந்து புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை. பொது அமைதிக்கோ அல்லது போக்குவரத்துக்கோ எந்தவித இடையூறும் ஏற்படுத்தாமல், விழுப்புரம் டவுன் போலீஸ் பாதுகாப்பு உடனும் மற்றும் பாரத் பெட்ரோலியம் மேலாளர் அருண் சுப்பிரமணியன், மற்றும் விற்பனை அதிகாரி ஜெயக்குமார் தலைமையிலும் அமைதியான பேரணி நடத்தப்பட்டது. இதில் பொதுமக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



# ஊத்தங்கரை பாம்பாறு அணையில் இருந்து விவசாயிகளின் பாசன வசதிக்காக பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எம் எல் ஏ தண்ணீர் திறப்பு

## சுமார் 4000 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பயனடையும்

கிருஷ்ணகிரி, பிப்.15-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்துள்ள பாம்பாறு அணை நீர்த்தேக்கம் உள்ளது, அணையின் நீர்மட்ட உயரம் 19,68 அடியாகும்,இதன் முழு கொள்ளளவு 280 மி,க,அடியாகும்,இந்த அணையின் தண்ணீரை நம்பி தான் ,ஊத்தங்கரை பகுதியில் மிட்டப்பள்ளி, மூன்றாம் பட்டி, நடுப்பட்டி, எட்டுப்பட்டி, பாவக்கல், உட்பட 12 கிராமங்களும், தர்மபுரி மாவட்டம் அரூர் பகுதியில் தா,அம்மா பேட்டை, வேடகட்டடுமடுவு, ஆண்டியூர் உட்பட்ட நான்கு கிராமங்கள் என சுமார் 4000 ஏக்கர் விளை நிலங்கள் இந்த தண்ணீரை நம்பி விவசாயம் செய்து வருகின்றனர், இந்த அணையின் தண்ணீர் திறப்பு மூலம் 4000 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பயனடையும் ,இன்று நடைபெற்ற இந்த பாம்பாறு அணை தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனை குரல்,பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே, மதியழகன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தனர்,திமுக ஒன்றிய கழக செயலாளர்கள் எக்கூர் செல்வம், மூன்றம்பட்டி எஸ் குமரேசன் , ரஜினி செல்வம், மாவட்ட பொருளாளர் கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே ஆர் கே நரசிம்மன், கிருஷ்ண மூர்த்தி, வட்டாட்சியர், ராஜேஸ்வரி அரூர் உதவி செயற்பொறியாளர் பார்த்திபன், ஊத்தங்கரை உதவி பொறியாளர் பிரபு,

கிராம நிர்வாக அலுவலர் பழனிச்சாமி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காந்தி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சின்னதாய், ஒன்றிய துணைச் செயலாளர் சென்னை செட்டி,தகவல் தொழில் நுட்ப அணி சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் பெருமாள் சாமி, மற்றும் மாவட்ட நிர்வாகம் மற்றும் நீர்வளத்துறை சார்பாக அதிகாரிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர், மொத்தம் 120 நாட்களுக்கு இந்த தண்ணீர் திறந்த விடப்படும் என நீர்வளத்துறை அதிகாரிகள், தெரிவித்துள்ளனர்,

# நிதி இல்லை - 100 நாள் வேலை இல்லை ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்ததாக பாஜக-அதிமுக மீது கடும் கண்டனம்

## காவேரிப்பட்டினத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மாபெரும் ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி, பிப்15-

ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யாததையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் (100 நாள் வேலைத் திட்டம்) செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள குறைப்பையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் காவேரிப்பட்டினம் பேருந்து நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன் மற்றும் பேரூர் கழக செயலாளர் ஜே.கே.எஸ். பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன், மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன், காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார், நாகோஜனஅள்ளி தம்பிதுரை, மாநில தொமுச துணைச் செயலாளர் மோகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

பேச்சாளர்கள் தங்களது உரையில், “தமிழ்நாட்டிற்கு உரிய வரிவருவாய் பங்கீடு மற்றும் திட்ட நிதி வழங்கப்படவில்லை. 100 நாள் வேலைத் திட்டத்திற்கு தேவையான நிதி தாமதப்படுத்தப்பட்டதால் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் இந்த பாகுபாடு அணுகுமுறைக்கு துணை போகும் அதிமுகவும் மக்களிடம் பதில் கூற வேண்டும்” என வலியுறுத்தினர்.

மேலும், இடது கம்யூனிஸ்ட் கட்சியின் ராமமூர்த்தி, ராமசாமி, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றிய செயலாளர் சசிகுமார், காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை பிரிவு மாநில துணைத்தலைவர் ஜாவித், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, பாபா மாதையன், சசிகலா தசரா, ஒன்றிய அவை தலைவர் இளங்கோ, இலக்கிய பேரவை மோகன், திமுக மாவட்ட பிரதிநிதி நாகராஜ் ,காங்கிரஸ் நகர செயலாளர் ஸ்ரீ ராம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் திரளான கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று, தமிழ்நாட்டுக்கு உரிய நிதி ஒதுக்கீட்டை உடனடியாக வழங்க வேண்டும், 100 நாள் வேலைத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். காவல்துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161